**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.115/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.10 |
| Name : | ஜலாலுதீன் |
| Father's Name/Husband Name: | மைதீன் |
| Village : | கைகளத்தூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 67/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 10.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிாிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு நான் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது, கைகளத்தூர் போலீசார் யாராவது செயின் அறுத்து சென்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்று கேட்டார்கள் நான் தெரியாது என்று சொன்னேன். அது சம்பந்தமாக என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். நான் அதில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். **(என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.7 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எந்த தேதி, மாதம், வருடத்தில் கையொப்பமிட்டேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னுடன் யார் யார் கையொப்பம் செய்தனர் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார்கள் வந்ததற்கு சாட்சியாக கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.